# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 13வது கூட்டம் 21-02-2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் 6:15 மணிக்கு பங்குத்தந்தையின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய தினம் திரு. அல்பிரட் ஞானராஜா, திரு. விஜயகுமார் அகஸ்ரின் அவர்கள் சமூகம் தரவில்லை. திரு. விஜயகுமார் அகஸ்ரின் அவர்களுக்குப் பதிலாக திரு. வினிபிரட் அவர்கள் சமூகம் தந்திருந்தார். கடந்த மாதக் கூட்ட அறிக்கை செயலாளர் அவர்களால் வாசிக்கப்பட்டது. அவற்றில் சில திருத்தங்கள் செய்த பின்னர் திரு, றொபின் அவர்கள் முன்மொழிய, திரு. அமிர்தநாதர் அவர்கள் அவர்கள் வழிமொழிந்து அவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும், ஆயர் இல்லத்துக்கு எமது மறைத்தளத்தால் பூர்த்திசெய்து அனுப்பப்படவேண்டிய பங்குப் பணிகள் பற்றிய ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் பங்குத்தந்தை கூறினார். இவ்வருடம் புனித வாரத்தை முன்னிட்டு, புனித வெள்ளியன்று இயேசுவின் பாடுகளைத் தியானிக்கும் வகையில் ‘காட்சித் தியானம்’ ஒன்றினை ஏற்பாடுசெய்யலாம் என்றும், அதற்குத் தேவையான விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. அதற்குத் தேவையான ஒலி, ஒளி அமைப்பிற்குப் பொறுப்பேற்றுக்கொள்வதாக திரு. யூலியன், திரு. அமிர்தநாதர் அவர்கள் கூறினார்கள். மேலும், ஆலயத்திலுள்ள பொருட்களின் இருப்பு எடுப்பு விரைவில் முடிக்கப்படவேண்டும், அதாவது அடுத்த கூட்டத்துக்கு முன்னால் அவ்வேலைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும் என்றும், Wax போடவேண்டிய வேலைகளும் துரிதகதியில் செய்யப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

நாற்காலிகள் மிகவும் பழைமையானதாக இருப்பதனால், அவைகளை மாற்றலாமா என்று திரு. சார்ள்ஸ் அவர்கள் வினவியதற்கு, அதற்கான செலவினம் எவ்வளவு என்பதை விசாரித்து தெரிவிக்கும்படி பங்குத்தந்தை கூறினார். மேலும், பங்குச்சபை உறுப்பினர்களின் பணிக்காலம் நிறைவுபெற்று புதிய உறுப்பினர்கள் இணைக்கப்படும் போது குறைந்தது இரண்டு கூட்டங்களுக்காவது பழைய உறுப்பினர்களுடன் அவர்களை கலந்து கொள்ளவைக்க வேண்டும் எனவும் கருத்துக் கூறப்பட்டது. பங்குச்சபை உறுப்பினரான திரு. அல்பிரட் ஞானராஜா அவர்கள் பங்குச்சபையிலிருந்து விலகிக்கொள்வதாக தனக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளதாக பங்குத்தந்தை தெரிவித்தார். எமது மறைத்தளத்தில் மறைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு **Faith First** என்னும் பாடத்திட்டம் கற்பிக்கப்பட்டுவருகின்றது. அவற்றிற்கான பாடப்புத்தகங்கள் ஆங்கில மொழியில் இருப்பதனால், அவை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

ஒரு color printer இருந்தால் அப்பிரதிகளை மாணவர்களுக்கும் அச்சிட்டு வழங்கலாம் என்றும், அத்துடன் அடுத்த கல்வி ஆண்டில் அவை தமிழ் மறைக்கல்விப் பாடப்புத்தகங்களாக வெளியிடப்படும் என்றும் திரு. அம்புறோஸ் அவர்கள் கூறினார். இறுதியாக, திரு. சூசைமாணிக்கம் அவர்களின் இறுதிச் செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட்.தந்தை அன்றூா தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்